**19.01.2024**

**அ.வ.எண். 232/2012**

**<u>பி.சா.1 தனலட்சுமி அவர்களின் குறுக்கு விசாரணை</u>**

1. வாரிசு சான்றிதழ் கோரி நான் எப்போது மனு தாக்கல் செய்தேன் என்றால் எனக்கு தெரியாது. இந்த வழக்கை தாக்கல் செய்வதற்கு முன்பு எனது தாயார் மற்றும் எனது தம்பி மனு கொடுத்தார்கள். பி.சா.ஆ 16 ல் உள்ள விவரங்கள் எனக்கு தெரியாது. வாரிசு சான்றிதழ் பெறுவதற்கு நான் விண்ணப்பித்தேனா என்றால் ஏற்கனவே வழங்கப்பட்ட வாரிசு சான்றிதழின் நகல் பெற்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன்.

2. எவ்வளவு காலத்திற்கு முன்பு ராமாதாஸ் மேஸ்திரியின் வாரிசு சான்றிதழ் வழங்கப்பட்டது என்றால் இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு வழங்கப்பட்டது. பி.சா.ஆ 16, 24.04.2023 அன்று உத்தரவிடப்பட்டது என்றால் எனக்கு படிக்க தெரியாததால் எனக்கு தெரியாது. பி.சா.ஆ 16 வழங்குவதற்கு முன்பு வருவாய் அலுவலகத்தில் இருந்து என்னை விசாரணை செய்தார்கள். சுமார் 5 வருடத்திற்கு முன்பு விசாரணை செய்தார்கள். மேற்படி விசாரணையில் இந்த வழக்கு குறித்து நான்

சொல்லவில்லை. பி.சா.ஆ 16 வழங்குவதற்கு முன்பு வாதி மற்றும் அவரது சகோதரர்களை விசாரணை செய்யவில்லை.

3. இறந்த நபரின் வாரிசுகள் யார் என்று பிரச்சனை ஏற்பட்டால் அதை தீர்மானிக்க உரிமையியல் நீதிமன்றத்திற்கு மட்டும் தான் அதிகாரம் உள்ளது என்றால் சரியல்ல. இந்த வழக்கு நிலுவையில் இருக்கும்போது அதன் நிலவரத்தினை மறைத்து பொய்யாக பி.சா.ஆ 16 பெற்றதால் அது செல்லதக்கதல்ல என்றால் சரியல்ல. பி.சா.ஆ 16 னை எதிர்த்து மேல்முறையீடு செய்வதற்கு கால அவகாசம் உள்ளதால் அது இறுதியான ஆவணம் என்று எடுத்துகொள்ள முடியாது என்றால் சரியல்ல.

4. பி.சா.ஆ 16 னை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த பிறகு அதன் விவரத்தினை தெரிந்துகொண்டு வாதி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மேல்முறையீடு செய்த மனு நிலுவையில் உள்ளது என்றால் சரியல்ல. எனவே பி.சா.ஆ 16 ன்அடிப்படையில் இந்த வழக்கை தீர்மானிக்க முடியாது என்றால் சரியல்ல. வாதிகளை விசாரணை செய்யாமல் பி.சா.ஆ 16 வழங்கப்பட்டதால் இது செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல.